**தெவிநுவர பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெவிநுவர பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தெவிநுவர பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான கபுகம மேற்கு வேஹல்ல பிரதான வாகனத் தரிப்பிடம் நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,932,778 இற்கான தொகை காணி மற்றும் கட்டடங்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | 2021 ஆண்டிற்கான இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2019 ஆண்டில் கபுகம நூலகத்தை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 311,315 இற்கான தொகையினை மீளாய்வாண்டின் போதும் மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | | |
| (இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பொதுக் களஞ்சிய இருப்பு கணிக்கும் போது ஏற்பட்டிருந்த குறைபாடுகள் காரணமாக பொதுக் களஞ்சிய இருப்பின் பெறுமதி ரூபா 1,106,449 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | களஞ்சியப் பகுதியால் தகவல்கள் வழங்கும் போது ஏற்பட்டிருந்த வழு ஒன்றாக காணப்பட்டதுடன், அதனை எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 18,925,338 தொகைக்கான 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்வுக்கு தேவையான தகவல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. | காணி மற்றும் கட்டடங்கள் தொடர்பாக புதிய கிரய மதிப்பீடு தயாரிப்பதற்கும், குழு ஒன்றின் மூலம் பௌதீக ரீதியாக காணப்படும் அனைத்து சொத்துக்களையும் இனங்கண்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 25,266,485 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 31,245,653 தொகையாகும்.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

#### (அ) வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 4,994,262 தொகைக்கான நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொற்றுநோய் நிலைமை முடிவடைந்த பின்னர் நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

**(ஆ) ஏக்கர் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 69,093 தொகைக்கான நிலுவை ஏக்கர் வரி அறவீடு செய்வதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏக்கர் வரி பதிவேட்டின் உரிமையாளர்கள் மற்றும் காணி தொடர்பான தெளிவான தகவல்கள் இன்மையால் பதிவேடு பேணுவதற்கு முடியாமல் உள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

**(இ) வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 11,786,219 தொகைக்கான நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இந்த பெறுமதியுடன் தொடர்புடைய அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீதி ரூபா 10,891,560 தொகையாக இருந்தது. | கொரோனா தொற்றுநோய் நிலைமை முடிவடைந்த பின்னர் நிலுவையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ii) | சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு கொடுக்கும் போது உடன்படிக்கையின் 23 பிரிவின் பிரகாரம் துணை வாடகை கொடுக்கப்படக் கூடாது எனினும், 03 வர்த்தக தொடர் கட்டடங்களை சேர்ந்த கடை அறைகள் மற்றும் 07 தரை சந்துகள் அவற்றின் 06 உரிமையாளர்களினால் சபையின் அங்கீகாரம் இன்றி சபையினால் அறவிப்படும் மாதாந்த கடை வாடகையை விட கூடுதலான வாடகைத் தொகைக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | உடன்படிக்கையின் 23 ஆவது பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | சபைக்குச் சொந்தமான பழைய வர்த்தக தொடர் கட்டடத்தை சேர்ந்த 06 கடை அறைகள், புதிய வர்த்தக தொடர் கட்டடத்தை சேர்ந்த 15 கடை அறைகள் புதிய வர்த்த தொடர் கட்டடத்திற்கு பின் பக்கமாக உள்ள 08 தரை சந்துகள் மற்றும் பழைய வர்த்தக தொடர் கட்டடத்தின் பின் பகுதியில் தரை சந்து ஒன்றும் ஆக 30 கடை | எதிர் காலத்தில் இது தொடர்பாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடை அறைகளை வாடகைக்கு கொடுத்தல் மற்றும் பராமரித்தல் முறைப்பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

அறைகள் நீண்ட காலமாக வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் மூடப்பட்டிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தம்புள்ள மற்றும் நுவரஎலிய பிரதேச செயலாளர்களினால் விநியோகிப்பதற்காக விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,586,348 இற்கான மரக்கறி இருப்பினை இலவசமாக விநியோகிக்கும் போது வட்டாரத்தில் உள்ள கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமூர்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் பரிந்துரைகளை பெற்றிருக்காததுடன், அந்த மரக்கறிகளில் 728,100 கிலோ கிராம் தொகையினை விற்பனை செய்து 2020 ஜூலை 01 அளவில் இரண்டு பிரதேச செயலகங்களுக்கு ரூபா 567,100 தொகை அனுப்பப்பட்டிருந்தது. | சபையின் மந்திரிமாரின் உதவியுடன் மரக்கறி விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், பழுதடைந்த மரக்கறி எண்ணிக்கை தொடர்பாக விசாரணை சபை ஒன்றின் மூலம் விசாரணை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் ஒன்று கிடைக்கவில்லை என. | முறையான நடைமுறை ஒன்று கடைபிடிக்கப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது சபிரி கமக் சமூக அடிப்படை கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 3,387,627 இற்கான மதிப்பீட்டுப் பெறுமதியுடைய 07 பாதைகளின் கொங்கிரீட் பரிசோதனைகளின் படி அவற்றில் 05 பாதைகளில் குறிப்பிடப்பட்ட கன அளவு மற்றும் வலு காணப்படவில்லை. | குறிப்பிட்ட கனம் காணப்படாத 05 பாதைகள் மற்றும் ஏனைய 02 பாதைகள் தொடர்பான பில் பத்திரங்களுக்கு கொடுப்பனவுகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. | மதிப்பீட்டின் பிரகாரம் நிர்மாண வேலைகள் குறிப்பிட்ட நியமங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரமாகும், உக்கக்கூடிய குப்பைகளை பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கும் உக்காத குப்பைகளை மீள்சுழற்சி செய்வதற்கும், நிலையான மற்றும் முறைப் பிரகாரம் குப்பை முகாமைத்துவ செயற்திட்டம் ஒன்று சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்காததுடன், அதற்குப் பதிலாக நாளாந்தம் சேகரமாகும் சுமார் 3 ½ தொன் உக்கக் கூடிய மற்றும் உக்காத குப்பைகள் என வகைப்படுத்தாமல் மாத்தறை பிரதேச சபைக்கு சொந்தமான சதுப்பு நிலம் ஒன்றில் போடப்படுகின்றது என. | உக்கக் கூடிய குப்பைகளை மாத்திரம் குறிப்பிட்ட இடத்தில் போடப்படுவதுடன், அந்த உக்காத குப்பைகளை மாதாந்தம் சேகரிக்கப்பட்டு கொடவில குப்பை மீள்சுழற்சி நிலையத்திற்கு ஒப்படைக்கப்படுகின்றன என. | முறைப் பிரகாரம் குப்பை அகற்றுதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |